**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.2**
**OS.NO.104/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | **:** | பழனி |
| **FATHER NAME** | **:** | |
| **VILLAGE** | **:** | |
| **TALUK** | **:** | |
| **CALLING** | **:** | |
| **RELIGION** | **:** | |
| **AGE** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 20.07.2023.**

குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஜெகதாம்பாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. அவர்கள் 06.10.1997ல் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. அந்த உயிலில் ஈஸ்வரியும், மீராபாயும் சொத்துக்களை அடைய வேண்டும் என எழுதிவைத்துள்ளார் என்றால் தவறு. அந்த உயிலை நான் பார்த்தேன். அந்த உயில் உண்மையானது. 1998ல் ஜெகதாம்பாள் இறந்துவிட்டார் என்றால் சரி. அவர் இறந்தபிறகு அந்த உயில் அமலுக்கு வந்துவிட்டது என்றால் சரி. அந்த சொத்தை மீராபாயும், ஈஸ்வரியும்தான் தங்களுக்கு பாத்தியம் என்று சொல்லி அனுபவித்து வந்தார்கள் என்றால் சரி. அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோம். அவர்கள் இருவரும் சேர்ந்து தாவா சொத்தை லிக்மிசந்த், உத்தம்சந்த் ஆகியோருக்கு 2007ல் கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் சரி. 2007லேயே அந்த விஷயம் எனக்கு தெரியும். கண்ணப்ப கவுண்டருக்கு 1948ல் நடந்த பாகத்தின்படி பாதி பாகம் வந்துவிட்டது என்றால் சரி. அவரும் 24.07.1997ல் உயில் எழுதிவிட்டு இறந்துவிட்டார் என்றால் சரி. அந்த உயில்படி அவருடைய பாகச்சொத்தை அவருடைய மனைவியும், பிள்ளைகளும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி. அவர்களும் தங்களுடைய பாகத்தை லிக்மிசந்த், உத்தம்சந்த் ஆகியோருக்கு 2007ல் கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் சரி. அதனால் மொத்த சொத்தும் லிக்மிசந்த், உத்தம்சந்த் ஆகியோருக்கு 2007லேயே பாத்தியப்பட்டுவிட்டது என்றால் சரி. அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. அவர்கள் இருவருமே அந்த சொத்தை 26.04.2011ல் ஜவாரிலால் என்பவருக்கு கிரயம் செய்ய பொது அதிகாரம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரி.

.......2

ஜவாரிலாலை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அவர் 2011ல் விற்ற விவரம் எங்களுக்கு தெரியும். 20.05.2011ல் தாவா சொத்துக்கள் அனைத்தையும் கோல்டன் பிரைவேட் லிமிடெட்டிற்கு கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் சரி. பட்டா எல்லாம் மாறிவிட்டது என்றால் சரி. 2007ல், 2011ல் தெரிந்தவுடன் ஏதாவது வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. அந்த கோல்டன் பிரைவேட் லிமிடெட்டை தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கவில்லை. அவர்களும் 26.10.2015ல் பியர்ல் ஹீயூமன் கேருக்கு கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரி. அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அவர்களும் சான்கோ பவுண்டேஷனுக்கு கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரி. அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. சான்கோ பவுண்டேஷன் தாவா இடத்தில் 11மாடி கட்டிடம் கட்டியுள்ளார்கள் என்றால் சரி. அங்கு ஹாஸ்பிட்டல் நடந்து வருகிறது என்றால் சரி. 1998ல் இருந்து இன்றைய தேதிவரை தாவா சொத்தை நாங்கள் அனுபவிக்கவில்லை என்றால் சரி. 3ம் பிரதிவாதி வழக்கறிஞரிடம் அழைத்துச் சென்றதாக நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் சுவாதீனம் இல்லாத காரணத்தாலும், தகுதியான தரப்பினரை வழக்கில் சேர்க்காத காரணத்தாலும் நான் தாக்கல் செய்துள்ள இந்த தாவா தள்ளுபடி செய்வதற்கு உகந்தது என்றால் சரியல்ல.

<u>2ம் பிரதிவாதி 5ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்கிறார்.</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.